# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## MCOP NO. 763/2022

**26.09.2023 - ம.சா. 1 சம்பத் சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தானது 13.6.2019 மாலை 5 மணியளவில் கண்ணக்குருக்கை கிராமம் அருகே நடைபெற்றது. விபத்தின் போது நான் தான் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றேன். என்னுடைய வாகனத்திற்கு பின்னால் என் மனைவி உட்கார்ந்து வந்திருந்தார். எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் இல்லை. விபத்தின் போது நான் ஹெல்மெட் அணிந்திருந்தேன். அந்த ரோடானது திருவண்ணாமலை - செங்கம் செல்லும் பிராதான சாலை. நல்ல இடைவெளியான சாலை. கர்நாடகா அரசு பேருந்து எனக்கு பின்னால் வந்து மோதி விபத்து ஏற்படுத்தியது. இரு சக்கர வாகனத்தை நான் ரோட்டை ஒட்டி இடது பக்கமாக சென்றேன்.

பஸ் திடீரென்று ஹாரன் அடித்ததால் நான் ரோடின் நடுபகுதிக்கு வந்து விட்டேன் என்றால் சரியல்ல. நான் இருசக்கர வாகனத்தை சரியாக ஓட்டிச் செல்லாமல் விபத்து ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. எனவே எதிர்மனுதாரர் நஷ்டஈடு தர வேண்டியது இல்லை என்று சொன்னால் சரியல்ல. மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

இந்த விபத்தில் இறந்து போன என் மனைவிக்கும், எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன். 2ம் மனுதாரர் சுதா என் மகள். அவருக்கு திருமணமாகி கணவருடன் தனியாக வசித்து வருகிறார். 3ம் மனுதாரருக்கு திருமணம் ஆகவில்லை. 4ம் மனுதாரர் கல்லூரி படித்து வருகிறார். 18 வயது பூர்த்தியாகிவிட்டது. என் மனைவி என்ன வேலை செய்தார், வருமானம் ஈட்டினார் என்பது குறித்து நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றும், நான் மிகைப்படுத்தி அதிக நஷ்டஈடு கோருவதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

இருசக்கர வாகனம் எனக்கு சொந்தமானது. அதனை காப்பீடும் செய்துள்ளேன். இரு சக்கர வாகனம் தீர்த்தகிரிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டாளரை சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது தள்ளுபடிக்கு உரியது என்றால் சரியல்ல. நஷ்டஈடு இரு சக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டாளர் தான் தர வேண்டும் என்றும், எதிர்மனுதாரர் தரப்பில் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/- சம்பத்

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**MCOP NO. 763/2022**

**26.09.2023 - ம.சா. 2 சுரேஷ் சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கைப்பற்றி தெரியும். விபத்து குறித்து காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை. போலீசாரிடம் விபத்து குறித்து வாக்குமூலம் அளிக்கவில்லை. குற்றவியல் வழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை. 1ம் மனுதாரர் அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். தெரிந்தவர், உறவு இல்லை. என்னுடைய கிராமத்திற்கும், விபத்து ஏற்பட்ட இடமான கண்ணக்குருக்கை கிராமத்திற்கும் இடையே சுமார் 20 கி.மீட்டர் இருக்கும். விபத்து தேதியில் நான் என் கிராமத்தில் இருந்து திருவண்ணாமலை நோக்கி வந்து கொண்டிருந்தேன்.

திருவண்ணாமலை - செங்கம் சாலை ஒரு பஸ் வரலாம், ஒரு பஸ் போகலாம். நான் பஸ்சுக்கு முன் திசையில் வந்து கொண்டு இருந்தேன். நான் 100 அடி தூரத்தில் பார்த்த போது இரு சக்கர வாகனத்தில் ஒரு நபர் வந்து கொண்டிருந்தார். அவருக்கு பின்னால் வந்த பஸ் மோதி விபத்து ஏற்படுத்தியது. இருசக்கர வாகனத்தில் வந்த நபர் ரோடின் ஓரமாக வந்து கொண்டிருந்தார். அவர் ரோடிற்கு நடுவே அஜாக்கிரதையாக வந்து கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த 1ம் மனுதாரர் திடீரென்று இடது புறத்தில் இருந்து வலது புறம் மாறியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

சம்பவம் என் முன்னால் நடந்ததால் நான் நேரடியாக பார்த்தேன். நான் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/- சுரேஷ்

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.